DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
O.S.No. 85/2014
******

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : செல்வராஜ் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.12.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் வாதி. எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண ஆணை உறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணை உறுதி ஆவணம் எனது தகவலின் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு கடந்த 30.07.2011 ஆம் ஆண்டில் பிரதிவாதி பிறப்பித்துக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் அசல் வா.சா.ஆ.1. கடந்த 09.06.1993 ஆம் தேதியில் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரர்கள், பெற்றோர்கள் செய்து கொண்ட பதிவு பாக ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2. 13.05.1999 ஆம் தேதியில் பிரதிவாதி, தன்னுடைய சகோதரர் சீனிவாசனுக்கு எழுதி வைத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3. 12.05.2008 ஆம் தேதியில் பிரதிவாதியின் தாய், பிரதிவாதி, அவரது சகோதரர் கோதண்டராம் ஆகியோர்கள் சுப்புராஜ் என்பவருக்கு எழுதி வைத்த அதிகார ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4. 30.05.2008 ஆம் தேதியில் பிரதிவாதி மற்றும் அவருடைய தாய் ஆகிய இருவர்களும் சுப்புராஜ்க்கு எ,ழுதி வைத்த ரூ.4லட்சத்திற்கான அடமான ஆவணத்தின் சார்பதிவாளர்

அலுவலக நகல் வா.சா.ஆ.5.பிராதுபடி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை செய்ய கால அவகாகம் கோரப்பட்டதால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.